කාන්තාවන් පිළිබඳ ජාතික කොමිෂන් සභාව
பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு
National Commission on Women

வெற்றிடங்கள்

பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவில் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தகுதியுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பணிப்பாளர் - சட்டம் (HM 1-1) - 01 பதவி

தகைமைகள்	சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும். மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டவியல், மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், பாலினக் கற்கைகள் (Gender Studies), சமூகவியல், பொதுக் கொள்கை அல்லது ஏதேனும் தொடர்புடைய துறையிலான ஒரு முதுமாணிப் பட்டம் (Postgraduate Degree). மற்றும் சட்டப் பயிற்சியில் அல்லது சிரேஷ்ட சட்ட/முகாமைத்துவப் பதவியில் குறைந்தபட்சம் 13 வருடங்கள் அனுபவம் (திரண்ட அனுபவம்).
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	HM 1-1 -2025 ரூ. [140,640 - 15 x 4,100 – 202,140]
வயதெல்லை	35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

02. உதவிப் பணிப்பாளர் - சட்டம் (MM 1-1) - 01 பதவி

தகைமைகள்	இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருக்க வேண்டும். மற்றும் இப்பதவிக்கு பொருத்தமான துறையில் தகுதியைப் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவம்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	MM 1-1-2025 ரூ. [91,690 - 10 x 2,480 - 15 x 3,450 – 168,240]
வயதெல்லை	22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

03. உதவிப் பணிப்பாளர் - நிர்வாகம் (MM 1-1) - 01 பதவி

தகைமைகள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம் அல்லது இப்பதவியின் பாடப்பரப்பிற்கு பொருத்தமான வேறு ஏதேனும் துறையில் ஒரு இளமாணிப் பட்டம். மற்றும் இப்பதவிக்கு பொருத்தமான துறையில் தகுதியைப் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவம்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	MM 1-1-2025 ரூ. [91,690 - 10 x 2,480 - 15 x 3,450 – 168,240]
வயதெல்லை	22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

04. உதவிப் பணிப்பாளர் - நிதி (MM 1-1) - 01 பதவி

தகைமைகள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல், நிதி, வணிகவியல் அல்லது இப்பதவியின் பாடப்பரப்பிற்கு பொருத்தமான வேறு ஏதேனும் துறையில் ஒரு இளமாணிப் பட்டம். மற்றும் முதலாவது பட்டத்தைப் பெற்ற பின்னர், இப்பதவிக்கு பொருத்தமான துறையில் தகுதி பெற்ற பின்னரான ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம். அல்லது இப்பதவிக்கு பொருத்தமான பாடப்பரப்பைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார்ந்த கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர், இப்பதவிக்கு பொருத்தமான துறையில் தகுதி பெற்ற பின்னரான ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	MM 1-1-2025 ரூ. [91,690 - 10 x 2,480 - 15 x 3,450 – 168,240]
வயதெல்லை	22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

05. உதவிப் பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (MM 1-1) - 01 பதவி

தகைமைகள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வியாபார நிர்வாகம், புள்ளியியல் அல்லது இப்பதவியின் பாடப்பரப்பிற்கு பொருத்தமான வேறு ஏதேனும் துறையில் ஒரு இளமாணிப் பட்டம். மற்றும் முதலாவது பட்டத்தைப் பெற்ற பின்னர், இப்பதவிக்கு பொருத்தமான துறையில் தகுதி பெற்ற பின்னரான ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	MM 1-1-2025 ரூ. [91,690 - 10 x 2,480 - 15 x 3,450 – 168,240]
வயதெல்லை	22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

06. உள்ளக கணக்காய்வாளர் (MM 1-1) - 01 பதவி

தகைமைகள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல், நிதி, வணிகவியல் அல்லது இப்பதவியின் பாடப்பரப்பிற்கு பொருத்தமான வேறு ஏதேனும் துறையில் ஒரு இளமாணிப் பட்டம். மற்றும் முதலாவது பட்டத்தைப் பெற்ற பின்னர், இப்பதவிக்கு பொருத்தமான துறையில் தகுதி பெற்ற பின்னரான ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம். அல்லது இப்பதவிக்கு பொருத்தமான பாடப்பரப்பைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார்ந்த கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர், இப்பதவிக்கு பொருத்தமான துறையில் தகுதி பெற்ற பின்னரான ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	MM 1-1-2025 ரூ. [91,690 - 10 x 2,480 - 15 x 3,450 – 168,240]
வயதெல்லை	22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

07. நிர்வாக அதிகாரி (JM 1-1) - 01 பதவி

தகைமைகள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துலம் அல்லது இப்பதவியின் பாடப்பரப்பிற்கு பொருத்தமான வேறு ஏதேனும் துறையில் ஒரு இளமாணிப் பட்டம்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	JM 1-1-2025 ரூ. [72,650 - 10 x 1,360 - 18 x 2,040 – 122,970]
வயதெல்லை	22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

08. அபிவிருத்தி அதிகாரி (MA 4) - 04 பதவிகள்

தகைமைகள்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிர்வாகம், மனித வள முகாமைத்துவம், கணக்கியல், நிதி, முகாமைத்துவம், வணிகவியல், சட்டம், சமூகவியல் அல்லது இப்பதவியின் பாடப்பரப்பிற்கு பொருத்தமான வேறு ஏதேனும் துறையில் ஒரு இளமாணிப் பட்டம்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	MA 4 -2025 ரூ. [64,320 - 10 x 1,360 - 15 x 1,670 - 5 x 2,040 – 113,170]
வயதெல்லை	22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

09. முகாமைத்துவ உதவியாளர் - (தொழில்நுட்பம் அல்லாதது) (MA 1-1) - 04 பதவிகள்

தகைமைகள்	அ) க.பொ.த (சா/தர) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்: i. சிங்களம் / தமிழ் ii. ஆங்கில மொழி iii. கணிதம் மற்றும் ஆ) க.பொ.த (உ/தர) பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	MA 1-1 -2025 ரூ. [46,220 -10x540 -7x630 - 4x890 - 20x1,190 – 83,390]
வயதெல்லை	18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

10. சாரதி (PL 3) - 02 பதவிகள்

தகைமைகள்	க.பொ.த (சா/தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். மற்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் கனரக வாகனங்களை செலுத்துவதற்காக வழங்கப்பட்ட சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் வாகனம் செலுத்துவதில் குறைந்தபட்சம் (03) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	PL -3 -2025 ரூ. [43,280-10 X490 -10 X 540 -10X590 -12X 630-67,040]
வயதெல்லை	18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

11. அலுவலக உதவியாளர் (PL 1) - 02 பதவிகள்

தகைமைகள்	க.பொ.த (சா/தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு	PL -1 -2025 ரூ. [40,500-10 X450 -10 X 490 -7 X 540 -15X 590-62,530]
வயதெல்லை	18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

மேற்கூறிய அனைத்துப் பதவிகளுக்கும்

- 25.03.2025 திகதியிடப்பட்ட முகாமைத்துவச் சேவைகள் 01/2025ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பதவிகளின் சம்பளத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்பச் சம்பளம் 01.01.2027 முதல் அமுல்படுத்தப்படும்.
- அடிப்படைச் சம்பளத்தைத் தவிர, அனைத்துப் பதவிகளுக்கும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஆணைக்குழுவின் 12% பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்பு என்பன உரித்தானதாகும்.
- மேலே குறிப்பிட்டுள்ள குறைந்தபட்சத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து, பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலமாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு மேலதிகமாக, சாரதிகளுக்கு பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்படும் தொழில்முறைத் தேர்வும் (Trade Test) பொருந்தும்.

ஏனைய நிபந்தனைகள்:

- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கை பிரஜையாகவும், நற்பண்பு உள்ளவராகவும், பதவியின் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கும் தீவின் எந்தப் பகுதியிலும் சேவை செய்வதற்கும் உடலளவிலும் மனதளவிலும் தகுதியுடையவராகவும் இருக்க வேண்டும்.
- ஆர்வமும் தகுதியும் உள்ள பிரஜைகள் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு மற்றும் அடிப்படைத் தகுதிகளை (கல்வி / தொழில்முறை தகுதிகள் மற்றும் அனுபவம்) நிரூபிப்பதற்கான சான்றிதழ்கள்/ ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட படிகளுடன் கீழே உள்ள மாதிரி விண்ணப்ப் படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். இத்தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால், ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் விண்ணப்பித்த பதவி ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களும் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் 2026 ஒக்டோபர் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும்.
- முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- இந்நியமனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு தனிப்பட்ட செல்வாக்கும் அல்லது பரிந்துரை முயற்சியும் தகுதியின்மையாகக் கருதப்படும்.
- குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.
- இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் ஆணையாளர் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்
பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு,
இல. 110/9, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இலக்கம் : +94112685582
மின்னஞ்சல் : contact.ncwsrilanka@gmail.com

பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

..... **பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

1. தனிப்பட்ட விபரங்கள்

முழுப்பெயர் (வண / திரு / திருமதி / செல்வி)				
முதலெழுத்துக்களுடன் பெயர்				
பிறந்த திகதி / வயது	திகதி:	மாதம்:	வருடம்:	வயது:
பாலினம்	ஆண்:		பெண்:	
தேசிய அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கம்				
சிவில் நிலை	திருமணம் ஆனவர்:		திருமணம் ஆகாதவர்:	
இனம்				
நிரந்தர முகவரி				
தொடர்பிலக்கம்				
மின்னஞ்சல் முகவரி				

2. கல்வி / தொழில்முறை தகுதிகள்

2.1 க.பொ.த (சா/தர) பரீட்சை வருடம்: சுட்டெண்:

(முகாமைத்துவ உதவியாளர், சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்)

	பாடம்	சித்தி		பாடம்	சித்தி
1			6		
2			7		
3			8		
4			9		
5			10		

2.2 க.பொ.த (உ/தர) பரீட்சை வருடம்: சுட்டெண் :

(முகாமைத்துவ உதவியாளர், சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்)

	பாடம்	தரம்
1		
2		
3		
4		

2.3 பட்டத் தகைமைகள்

	பட்டம்	பல்கலைக்கழகம் / நிறுவனத்தின் பெயர்	பெற்ற வகுப்பு / தரம்	வழங்கப்பட்ட திகதி	பட்டம் செல்லுபடியாகும் திகதி
1					
2					

2.4 முதுமாணிப் பட்டத் தகைமைகள்

	பட்டம்	பல்கலைக்கழகம் / நிறுவனத்தின் பெயர்	வழங்கப்பட்ட திகதி	பட்டத்தின் செல்லுபடியாகும் திகதி
1				
2				
3				

2.5 தொழில்முறை தகுதிகள்

(பட்டயத் தகைமைகள் / அங்கத்துவம் / பதிவுகள் / முதுகலை டிப்ளோமா / உயர் டிப்ளோமா / டிப்ளோமா / தேசிய தொழிற்தகுதி (NVQ) / சான்றிதழ் தகுதிகள் (கணினி, மொழி போன்றவை உட்பட))

இல	தகைமைகள்	துறை	நிறுவனத்தின் பெயர்	வழங்கப்பட்ட திகதி	காலம்
1					
2					
3					
4					

3. வேலை அனுபவம்

	முதலாளி / நிறுவனம்	பதவி	முதல் வரை	வருடங்களின் எண்ணிக்கை	
				வருடங்கள்	மாதங்கள்
1					
2					
3					
4					

4. பாடவிதானத்திற்கு மேலதிகமான செயல்பாடுகள் (Extra-Curricular Activities)

5 ஏனைய சாதனைகள் (தலைமைத்துவம், முகாமைத்துவம், ஆராய்ச்சி, திட்ட ஈடுபாடுகள், அனுபவம், வெளியீடுகள் போன்றவை உட்பட)

6. உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்கள்

	பெயர்	பதவி	முகவரி	தொடர்பு விபரங்கள் (தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல்)
1				
2				

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் துல்லியமானவை என்றும் இத்தால் சான்றளிக்கின்றேன். இவ்விவரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது துல்லியமற்றவை என தெரியவந்தால், தெரிவுக்கு முன்னர் தகுதியிழக்கச் செய்யப்படுவதற்கும், நியமனத்திற்குப் பின்னர் இத்துல்லியமின்மை கண்டறியப்பட்டால் எவ்வித நஷ்டஈடும் இன்றி வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதை நான் அறிவேன்.

.....

விண்ணப்பதாரரின் கையொப்பம் திகதி